14–வது ஆண்டில் அடியெடுத்து வைத்தது

தந்தி டி.வி.க்கு பிரதமர் மோடி, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், தலைவர்கள் வாழ்த்து

சென்னை, நவ. 13–

14–வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள தந்தி டி.வி.க்கு பிரதமர் மோடி, முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மோடி

பிரதமர் மோடி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், 'தந்தி டி.வி. 14–வது ஆண்டு விழாவை கொண்டாடும் செய்தியறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். தந்தி டி.வி.யின் இந்த பயணத்தில் பங்கேற்ற அனைவரையும் வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

தாய் மொழிப்பற்று, மொழி உணர்வை ஊட்டும் தூண்டுகோலாகத் திகழும் தந்தி டி.வி. இன்னும் பல ஆண்டுகள் மக்களுக்கு சேவை செய்ய மனமார வாழ்த்துகிறேன்' என்று கூறியுள்ளார்.

துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன்

துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், '83 ஆண்டுகள் பழமை வாய்ந்த தந்தி குழுமத்தின் தந்தி டி.வி. தொடங்கியதில் இருந்து தமிழ் ஊடகத்துறையில் சிறப்பான பங்களிப்பை கொண்டிருக்கிறது.

உலகம் முழுவதும் இருக்கும் தமிழர்களிடையே உறுதியான பிணைப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த சீரிய சாதனைக்கு சொந்தக்காரர்களான, தந்தி டி.வி.யின் அர்ப்பணிப்பு மிக்க செய்தியாளர்கள், பணியாளர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நடுநிலையாக செய்திகளை வழங்கி, "ஆயுத எழுத்து", "மக்கள் மன்றம்", "கேள்விக்கென்ன பதில்" போன்ற நிகழ்ச்சிகள் வழியாக தந்தி டி.வி. தொடர்ந்து நாட்டின் பிம்பத்தை பிரதிபலிக்கிறது. இது வரை கேட்காத குரல்களுக்கும் மேடை அமைத்து கொடுத்திருக்கும் தந்தி டி.வி. தமிழ் ஊடக உலகின் பெருமையாக தொடர்ந்து விளங்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்' என்று கூறியுள்ளார்.

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின்

தமிழக முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:–

பெருமதிப்பிற்குரிய சி.பா.ஆதித்தனார் காட்டிய ஊடக வழியில், தந்தி டி.வி. செய்திகளை வழங்கி வருவது சிறப்பானது. தந்தி என்றால், அனைத்து தரப்பு மக்களுக்கும் இடமளிப்பது, நடுநிலையாக செய்திகளை வெளியிடுவது போன்ற அம்சங்களே தமிழக மக்கள் மனதில் தோன்றும். அந்த நம்பிக்கையை காப்பாற்றிக் கொள்ள வேண்டிய கடமை உணர்வுடன் இயங்கி வரும் தந்தி டி.வி. தொடர்ந்து இயங்க வேண்டும்.

மக்களை அரசியல்படுத்துவது, அறவழிபடுத்துவதில், இன்றைய 'டிஜிட்டல்' உலகத்தில் செய்தி ஊடகங் களின் பங்கு தவிர்க்க முடியாததாக மாறியிருக்கிறது. அத்தகைய மகத்தான பணிக்காக தந்தி டி.வி.யில் உழைத்துவரும் ஆசிரியர் குழுவினர், ஊடகத்துறையினர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்கள். 'தினத்தந்தி'யின் வெற்றிப்பாதையில் பயணித்து வரும் தந்தி டி.வி., மக்கள் நலனில் அக்கறையோடும், அறத்தோடும் தொடர்ந்து செயல்பட நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ராகுல்காந்தி

நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், '14–வது ஆண்டு விழாவை கொண்டாடும் தந்தி டி.வி.க்கு வாழ்த்துக்கள். ஊடகத்துறை மீதான அசைக்க முடியாத அர்ப்பணிப்பை கொண்டிருக்கும் தந்தி டி.வி.யின் ஒட்டுமொத்த குழுவுக்கும் எனது வாழ்த்துக்கள். அறிவுசார் செய்திகளை மக்களுக்கு வழங்குவதிலும், மக்கள் மன்றத்தில் ஆரோக்கியமான கருத்துருவாக்கத்திற்கும் தந்தி டி.வி.யின் செயல்பாடுகள் பாராட்டத்தக்கது' என்று கூறியுள்ளார்.

மல்லிகார்ஜுன கார்கே

அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், '14–வது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் தந்தி டி.வி.க்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். தந்தி டி.வி. தமிழ் ஊடக உலகின் நம்பகமான குரலாக உள்ளது. விவாதங்களுக்கான களமாக தந்தி டி.வி. மிகுந்த அர்ப்பணிப்புடன் தொடர்ந்து இயங்கி வருவது பாராட்டத்தக்கது.

தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக சாமானிய மக்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கையை பாதிக்கும் விவகாரங்களில் கவனம் செலுத்தி வரும் தந்தி குழுமத்திற்கு எனது சார்பாகவும், காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும் வாழ்த்துக்கள்' என்று கூறியுள்ளார்.

எடப்பாடி பழனிசாமி

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், '14–வது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் தந்தி டி.வி.யின் பணிகள் மேலும் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

13 ஆண்டுகளாக தந்தி டி.வி.யின் சேவை மக்கள் மனநிறைவு பெறும் வகையில் உள்ளது. அது தொடர்வதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். 'தினத்தந்தி' நாளிதழ் போல் மக்கள் மத்தியில் பிரபலமாக இருக்கும் தந்தி டி.வி., பல தரப்பு மக்களும் பார்க்கும் செய்திகளை நடுநிலையோடு தெரிவித்து வருவதற்கு வாழ்த்துக்கள்' என்று கூறியுள்ளார்.

எர்ணாவூர் நாராயணன்

சமத்துவ மக்கள் கழக தலைவர் எர்ணாவூர் நாராயணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

தமிழ் தொலைக்காட்சி களிலேயே அதிக நேயர்களை கொண்டது தினத்தந்தி தொலைக்காட்சி. அரசியல், ஆன்மீகம், மக்கள் மன்றம், உலகச் செய்திகள் போன்ற செய்திகளை உடனுக்குடன் மக்களிடையே கொண்டு செல்வதில் தந்தி தொலைக்காட்சி சிறந்து விளங்குகிறது. 14–ம் ஆண்டு துவக்கமாக வலம் வந்து கொண்டிருக்கும் தந்தி டி.வி. கோடிக்கணக்கான மக்களை ஊக்குவித்து தமிழரின் பாரம்பரியத்தை உலக அளவில் நிலை நிறுத்தி வருகிறது. தந்தி டிவி குழுமத்திற்கு எனது சார்பாகவும், சமத்துவ மக்கள் கழகத்தின் சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தேரை பக்தர்கள் வடம் பிடித்து இழுத்த காட்சி.

தென்காசி

காசி விஸ்வநாதர் கோவில் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா தேரோட்டம்

தென்காசி, நவ. 13–

தமிழகத்தில் உள்ள பழமை வாய்ந்த சிவாலயங்களில் ஒன்றாக திகழும் தென்காசியில் உள்ள உலக அம்மன் உடனுறை காசி விஸ்வநாதர் கோவிலில் ஆண்டுதோறும் மாசி மற்றும் ஐப்பசி திருவிழா தேரோட்டம் விமர்சையாக நடைபெறும்.

இந்த ஆண்டுக்கான ஐப்பசி திருக்கல்யாண திருவிழா கடந்த 5–ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நாள்தோறும் சுவாமி– அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்று வந்தது.

தேரோட்டம்

இன்று திருவிழாவின் 9–வது நாளான சிறப்பு நிகழ்ச்சியாக உலகம்மன் திருத்தேரில் மாசி வீதிகளில் உலா வரும் திருத்தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது. தேரோட்டத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வடம் பிடித்து தேரை இழுத்தனர்.

விழாவில் முக்கிய நிகழ்ச்சியான சுவாமி– அம்பாள் திருக்கல்யாணம் 15–ந் தேதி இரவு நடைபெற உள்ளது. முன்னதாக தேரை தென்காசி எம்.எல்.ஏ. பழனிநாடார், கோவில் அறங்காவலர் குழு தலைவர் வல்லம் பாலகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் ஆகியோர் வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தனர்.

மாலி நாட்டில் கடத்தப்பட்ட

2 வாலிபர்களை மீட்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்

கலெக்டரிடம் மனு

கடையநல்லூர், நவ.13–

மாலி நாட்டில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டவர்களை தூதரகம் மூலம் விரைந்து மீட்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மாவட்ட கலெக்டரிடம் கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபிபூர் ரகுமான் மனு அளித்தார். அதில், மேற்கு ஆப்பிரிக்கா நாடான மாலியின் கோப்ரி நகரத்தில் பணியில் இருந்த இந்தியர்கள் 5 பேர் பயங்கரவாதிகளால் கடத்தப் பட்டதாக தகவல் வந்துள்ளது. அதில், கடையநல்லூர் முத்து கிருஷ்ணாபுரம் காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்த இசக்கிராஜா (36), புதுக்குடி ஊராட்சி கண்மணியாபுரம் சுரேஷ் (26) ஆகியோரும் அடங்குவர். நமது தூதரகம் மூலம் இருவரையும் பத்திரமாக மீட்டு தாய்நாட்டிற்கு அழைத்து வர துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு

பொதுப்பணித்துறை

கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர்

மொத்த தொகை (இனவிலை முறை)

மின்னணு முறை குறுகியகால மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.52/BCM/CBE/2025–26 / நாள்.07.11.2025

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் மின்னணு கொள்முதல் வலைதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளி **கண்காணிப்புப் பொறியாளர், பொபது.**, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர் அவர்களால் **"திருப்பூர் மாவட்டம் நல்லூரில் உள்ள பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 2024-25 ஆம் ஆண்டிற்கான நபார்டு RIDF XXX இன் கீழ் 8 வகுப்பறை மற்றும் 1 ஆய்வகக் கட்டடம் கட்டும் பணிக்கு (இரண்டாம் அழைப்பு), பொதுப்பணித்துறையில்** பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து, ஒப்பந்தப்புள்ளி இணையவழி முறையில் பெறப்பட்டு, இனவிலை முறை ஒப்பந்தப்புள்ளி அரசு மின்னணு கொள்முதல் வலைத்தளத்தில் (e-procurement portal of Government of Tamil Nadu) **26.11.2025 பிற்பகல் 03.00 மணி வரை பதிவேற்றம் பெற்று அன்றே பிற்பகல் 4.00 மணி முதல் திறக்கப்படும்.**

இதர அனைத்து விவரங்களும் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,

செ.ம.தொ.இ.6103/ஒப்பந்தப்புள்ளி/2025 **கட்டட கட்டுமானம் & பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர்–641001**

தமிழ்நாடு அரசு

பொதுப்பணித்துறை

திட்டங்கள், சேப்பாக்கம், சென்னை 600 005

மின்னணு ஒப்பந்தப்புள்ளி எண் 47தபொ/வ.அ/2025–26 நாள் 11.11.2025

ஒப்பந்தப்புள்ளி படிவம்: மொத்த தொகை/விலை விகித முறை (ஒருஉறை/இருஉறைமுறை)

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும், மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப்பொறியாளர், பொபது, திட்டங்கள், சேப்பாக்கம், சென்னை 600 005 அவர்களால் பதிவுபெற்ற தகுதிவாய்ந்த பொதுப்பணித்துறை கட்டட ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு முறையில் பதினெட்டு பணிகளுக்கு ஒப்பந்தங்கள் கோரப்படுகிறது.

1. வேலையின் விவரங்கள்: தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு பணி, கன்னியாகுமரி மாவட்டத்தில் இரு பணிகள், தென்காசி மாவட்டத்தில் ஒரு பணி, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு பணி, சேலம் மாவட்டத்தில் ஒரு பணி, ஈரோடு மாவட்டத்தில் ஒரு பணி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு பணி, திருச்சி மாவட்டத்தில் இரு பணிகள், அரியலூர் மாவட்டத்தில் ஒரு பணி, கடலூர் மாவட்டத்தில் மூன்று பணிகள், மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒரு பணி, விருதுநகர் மாவட்டத்தில் ஒரு பணி, திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு பணி மற்றும் சென்னை மாவட்டத்தில் ஒரு பணி. இப்பணிகளுக்கான ஒப்பந்ததாரர்கள் வகுப்பு விவரம், பணிவிவரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஆவணங்களுக்கு https:/tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.
2. ஒப்பந்தபுள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள்: **14.11.2025 முதல் 02.12.2025, மாலை 3.00 மணி வரை**
3. ஒப்பந்தபுள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்க கடைசிநாள் மற்றும் நேரம்: **02.12.2025 மாலை 3.00மணிவரை**
4. ஒப்பந்தபுள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: **03.12.2025 மாலை 3.30மணி முதல்**

செ.ம.தொ.இ/6086/ஒப்பந்தப்புள்ளி/2025 **தலைமைப்பொறியாளர், பொபது, திட்டங்கள், சேப்பாக்கம், சென்னை 600005**

திருச்செந்தூர் கோவிலில் உண்டியல் காணிக்கை வசூல் ரூ.4½ கோடி

தங்கம் 1¼ கிலோ, வெள்ளி 30¾ கிலோ கிடைத்தது

திருச்செந்தூர், நவ.13–

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் உண்டியல் காணிக்கைகள் மாதந்தோறும் திறந்து எண்ணப்படுகிறது.

நவம்பர் மாதத்திற்கான உண்டியல்கள் காணிக்கை எண்ணும் பணி கடந்த 2 நாட்களாக கோவில் வளாகத்தில் கோவில் தக்கார் அருள்முருகன் தலைமையில், இணை ஆணையர் ராமு முன்னிலையில் உண்டியல்கள் திறந்து எண்ணப்பட்டது. உண்டியல் எண்ணும் பணியில் சிவகாசி பதிணென் சித்தர் மடம் பீடம் குருகுல வேத பாடசாலை உழவாரப் பணிக்குழுவினர்கள் ஈடுபட்டனர். அதில் நிரந்தர உண்டியல்கள் மூலம் ரூ.4கோடியே 26லட்சத்து 22 ஆயிரத்து 507, தங்கம் 1 கிலோ 279 கிராம், வெள்ளி 30கிலோ 857கிராம், பித்தளை 46கிலோ, 312கிராம் செம்பு 7கிலோ 779கிராம், தகரம் 8கிலோ 916 கிராம், 1421 வெளிநாட்டு கரன்சிகளும் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி இருந்தனர்.

நெல்லை

சூர்யா மருத்துவமனையில் நீரிழிவு மருத்துவ மையம் திறப்பு

நெல்லை, நவ. 13 –

நெல்லை சந்திப்பு பஸ் நிலையம் எதிரே சூர்யா உயர் தர சிகிச்சைகளுக்கான மருத்துவமனை இயங்கி வருகிறது. இங்கு நவீன மருத்துவ வசதிகள் மற்றும் மருத்துவத்தில் சிறப்பு வாய்ந்த மருத்துவர்களால் மருத்துவ பயனாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை வழங்கி வருகிறது. இந்தத் மருத்துவமனை நெல்லை மற்றும் சுற்றுவட்டார மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையை வழங்கி வருகிறது.

இந்நிலையில் சூர்யா மருத்துவமனையில் புதிதாக சூர்யா நீரிழிவு மருத்துவ மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை ரோட்டரி இன்டர்நேஷனல் மாவட்ட ஆளுநர் (201112) மற்றும் பாலபாக்யா குழுமத் தலைவர் ஆறுமுகபாண்டியன் சிறப்பு மருத்துவத் தொகுப்பை அறிமுகப்படுத்தி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் நீரழிவு நோயின் மருத்துவ நிபுணர் டாக்டர் முகமது ரபீக், நீரழிவு நோய் குறித்தும் அதை கட்டுப்படுத்துவது, வராமல் பார்த்துக் கொள்வது பற்றியும் விளக்கினார். நிகழ்ச்சியில் சூர்யா மருத்துவமனை ஆலோசகர்கள் குழுவினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

காந்தி மார்க்கெட்டில் மழை நீர் குளம் போல் தேங்கியிருக்கும் காட்சி.

பாளையங்கோட்டை காந்தி மார்க்கெட்டில்

குளம் போல் தேங்கிய மழை நீரில் வியாபாரிகள் மீன்பிடித்து போராட்டம்

காய்கறி மூட்டைக்குள் தண்ணீர் புகுந்ததால் கடும் நஷ்டம் என புகார்

நெல்லை, நவ.13–

பாளையங்கோட்டையில் உள்ள பழமை வாய்ந்த காந்தி மார்க்கெட் முழுவதுமாக இடிக்கப்பட்டு ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டது தொடர்ந்து கடந்த பிப்ரவரி மாதம் முதல்–அமைச்சர் மு.க ஸ்டாலின் இந்த மார்க்கெட்டை திறந்து வைத்தார். நீதிமன்ற வழக்கு, கடை வாடகை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் புதிய கடைகளுக்கு வியாபாரிகள் வர மறுத்த நிலையில், கடந்த 10 நாட்களுக்கு முன்புதான் அனைத்து கடைகளும் தற்காலிக காய்கறி சந்தையில் இருந்து புதிய வணிக வளாகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட தொடங்கியது.

இந்த நிலையில் யாரும் எதிர்பாராத விதமாக நெல்லை மாநகரில் இடி–மின்னலுடன் பெய்த மழையால் காய்கறி சந்தை முழுவதும் மழை நீரால் நிரம்பியது. மக்கள் நடக்க முடியாதபடியும், வியாபாரிகள் பொருட்கள் கொண்டு செல்ல முடியாத படியும் சூழல் உருவானது.

கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து கட்டப்பட்ட வணிக வளாகம் மாற்றுத்திறனாளிகள் நடந்து வந்து காய்கறி வாங்க முடியாத சூழலில் உள்ளது என்பதை வெளிப்படுத்தும் விதமாக இன்று காலை மாற்றுத்திறனாளிகள் சிலர் கோஷம் எழுப்பிய வண்ணம் காய்கறி வணிக வளாகத்திற்குள் பேரணியாக சென்றனர்.

இதனிடையே நேற்றும், இன்றும் பெய்த மழையில் காய்கறி சந்தையை சூழ்ந்த மழை நீரில் தூண்டில் போட்டு வியாபாரிகள் மீன் பிடித்து தங்கள் வேதனையை வெளிப்படுத்தினர். லட்சக்கணக்கில் முன்பணம் மற்றும் ஆயிரக்கணக்கில் வாடகை கொடுத்தும் மழைநீர் வெளியே செல்வதற்கான அடிப்படை கட்டமைப்புகள் இல்லாதது வேதனை அளிக்கிறது. மழைநீர் அனைத்தும் பல்லாரி, சின்ன வெங்காயம் மூடைகளுக்குள் புகுந்து நாசம் ஆகிவிட்டது. கடும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் நாங்கள் தற்கொலை செய்ய வேண்டிய நிலை இருக்கிறது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாற்றுத்திறனாளிகள்.

நாங்குநேரி அருகே விபத்து

சாலையோர பள்ளத்தில் வேன் கவிழ்ந்து 2 வயது குழந்தை உள்பட 2 பேர் பலி

நெல்லை, நவ.13–

நெல்லை டவுன் பாட்டப் பத்து பகுதியை சேர்ந்த கேவல்ராம் என்பவரது மகன் சந்திர பிரகாஷ்(வயது 38).

பள்ளத்தில் கவிழ்ந்தது

இவர் தலைமையில் ஒரு வேனில் அவரது உறவினர்கள் 11 பேர் நேற்று அதிகாலை கன்னியாகுமரிக்கு சுற்றுலா சென்றனர். பின்னர் மாலையில் அங்கிருந்து ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்தனர்.

நாங்குநேரி உலகம்மன் கோவில் அருகே நான்கு வழிச்சாலையில் வேன் வந்து கொண்டிருந்தபோது திடீரென கட்டுபாட்டை இழந்த வேன் சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது.

அலறல் சத்தம்

இந்த விபத்தில் வேன் அப்பளம்போல் நொறுங்கியது. இடிபாட்டில் சிக்கியவர்கள் அலறல் சத்தம் போட்டனர். இதனை அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் பார்த்து நாங்குநேரி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

போலீசார் விரைந்து சென்று இடிபாடுகளில் சிக்கியிருந்தவர்களை மீட்டு நெல்லை அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் செல்லும் வழியில் சந்திரபிரகாஷ் உயிரிழந்தார்.

2 வயது குழந்தை பலி

காயமடைந்த குஷி (2), சம்பாதேவி (48), பப்ளிதேவி (45), ரீனா குமாரி (22), நாரட்ராம் (60), யுவராஜ் (10) மற்றும் 9 மாத கைக்குழந்தை யாஷிகாஉள்பட 11 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கு சிறிது நேரத்தில் குழந்தை குஷி உயிர் இழந்தார்.

இதுகுறித்து நாங்குநேரி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி

தூத்துக்குடி மாவட்டம்.

ந.க. எண். 17/2024 நாள்: 10.11.2025

வாரச்சந்தை மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சிக்கு பாத்தியப்பட்ட வாரச்சந்தை குத்தகை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 2025-2026 (ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2026 வரையிலான காலங்களுக்கு) செயல் அலுவலரால் வரவழைக்கப்படுகின்றன. வாரச்சந்தை குத்தகைக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 27.11.2025 (வியாழக்கிழமை) முற்பகல் 11.00 வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். வாரச்சந்தை குத்தகை பொது ஏலம் 27.11.2025 முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும். ஏலம் முடிவுற்றவுடன் ஆஜராகியிருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் மற்றும் ஏலதாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலரால் அல்லது அதிகாரம் பெற்றவரால் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் டேவணித் தொகை ரூ.5,00,000/-இக்கு வங்கி வரைவோலை செயல் அலுவலர், உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி (Executive Officer, Udangudi Town Panchayat) என்ற பெயரில் வரையோலையாக செலுத்த வேண்டும். மேலும் 01.01.2025 இக்கு பிறகு பெறப்பட்ட ரூ.5.00.000/-இக்கு குறைவில்லாத சால்வன்சி (சொத்து மதிப்பு) பேரூராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் நிபந்தனைகள் மற்றும் கூடுதல் விபரங்கள் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் வந்து கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

தலைவர்
உடன்குடி பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்

செயல் அலுவலர்(பொ)
உடன்குடி பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்

வெ. ஆணை எண் : 197/செ.ம.தொ.அ/ 2025 நாள்: 12.11.2025.
தூடி.

"சோதனை கடந்து சத்தியம் அடைந்தோம்.
சாதனை புரிந்து சிரத்தை பெற்றோம் என்பதை காட்டுவோம்!"

VTM லிமிடெட்

CIN L17111TN1946PLC003270

பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர், ராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு – 626003

இணையதளம்: www.vtmill.com|மின்னஞ்சல்: complianceofficer@vtmill.com|தொலைபேசி: +91 452 2482595

நிர்வாகக் குழு கூட்ட முடிவுகள் – 10 நவம்பர் 2025

SEBI (LODR) Regulations, 2015 இன் விதி 30 மற்றும் பொருந்தும் பிற விதிகளின் படி, அத்துடன் 2013 நிறுவனச் சட்டத்தின் பொருந்தும் பிரிவுகள் மற்றும் தொடர்புடைய விதிகள் ஆகியவற்றின் படி, 10 நவம்பர் 2025 அன்று நடைபெற்ற நிறுவனத்தின் இயக்குநர் குழு கூட்டத்தில் பின்வரும் விஷயங்கள் பரிசீலனை செய்து ஒப்புதல் அளிக்கப்பட்டு அறிவிக்கப்படுகிறது:

1. **75 வயதுக்கு மேற்பட்ட இயக்குநரின் பதவிக்காலத் தொடர்ச்சி நிறுவனத்தின் பணி செய்யும் நிர்வாகமில்லா இயக்குநரான திரு.ஆர்.எம்.சோமசுந்தரம் (DIN : 00071510) அவர்களின் பதவிக் காலத்தைக் 75 வயதுக்கு மேல் தொடர அரசிமன்றத்தால் சிறப்பு தீர்மானம் மூலம் ஒப்புதல் பெற பரிந்துரைக்கப்பட்டது.**

2. **சுயாதீன இயக்குநராக மீண்டும் நியமனம் – இரண்டாவது முறையாக (5 ஆண்டு) திரு. கணேஷ் ஆனந்தகிருஷ்ணன் (DIN: 00003586) அவர்களை 25 மார்ச் 2026 முதல் அடுத்த ஐந்து வருடங்கள் சுயாதீன இயக்குநராக மீண்டும் நியமிக்க சிறப்பு தீர்மானம் மூலம் பங்குதாரர் ஒப்புதல் பெற பரிந்துரைக்கப்பட்டது.**

3. **சுயாதீன இயக்குநராக மீண்டும் நியமனம் – இரண்டாவது முறையாக (5 ஆண்டு) திரு. எல். சேவுகன் (DIN: 03580186) அவர்களை 25 மார்ச் 2026 முதல் அடுத்த ஐந்து வருடங்கள் சுயாதீன இயக்குநராக மீண்டும் நியமிக்க சிறப்பு தீர்மானம் மூலம் பங்குதாரர் ஒப்புதல் பெற பரிந்துரைக்கப்பட்டது.**

4. **தொடர்புடைய நிறுவனத்துடன் ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் - தொடர்புடைய நிறுவனம் M/s.கலர் யார்ன்ஸ் பிரைவேட் லிமிடெட் உடன் ஒப்பந்தம் / ஏற்பாடுகளுக்கு பொருந்தும் சட்டங்களின் படி இயக்குநர் குழு ஒப்புதல் அளித்தது; தேவையான இடங்களில் பங்குதாரர் ஒப்புதல் பெறப்படும்.**

மேற்கண்ட விஷயங்களுக்கு உட்பட்ட விரிவான விவரங்கள் மற்றும் அஞ்சல் வாக்கெடுப்புக்கான அறிவிப்பு (Postal Ballot Notice) நிறுவனத்தின் இணையதளத்தில் (www.vtmill.com) வெளியிடப்படும்; மேலும் பங்குச் சந்தைகளுக்குக் (Stock Exchanges) பொருந்தும் விதிகளின் படி தாக்கல் செய்யப்படும்.

நாள் : நவம்பர் 10, 2025
இடம் : மதுரை

VTM லிமிடெட்டிற்காக,
கா.பிரியதர்ஷினி
நிறுவன செயலாளர் & இணக்க அதிகாரி